# வெற்றிமணி

மலர் 7 இதழ் 6

சிறுவர் மாத இதழ்



கருணையின் மூர்த்தி காந்திஜி

15-10-69 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம்.மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**

## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24 – ரூ. 7. (மெழுகு ரூ. 4)


(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு. பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி 15-10-69

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

★


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 75-00 |
| உள் அட்டை | ரூபா. | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 50-00 |
| உட் பக்கம் | ரூபா. | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

வெற்றிமணி
முள்ளியவளை — இலங்கை


## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
சிரிக்கும் முல்லை ... ... ... 4
குடிசனம் ... ... ... ... 6
ஆபிரிக்கா — தெற்கு-கிழக்கு பகு. 8
அங்கலாய்ப்பு ... ... ... 11
மகாத்மாவின் மணிமொழிகள் 12
கணக்கியலுக்கோர் அறிமுகம் 13
நேயர் குரல் ... ... ... ... 18
மாணவர்மன்ற அங்கத்தவர்கள் 18
கவிதை அரங்கம் ... ... 19
தப்பிக்கு! ... ... ... ... 22
ஆணவம் ... ... ... ... 24
புவியியற் பிரச்சினைகள் ... ... 27
'பி' உயிர்ச்சத்தும் கண்டுபிடிப்பும் 29
மாணவர்மன்ற, பேனநண்பர்சங்க
விபரமும், விண்ணப்பப்பத்திரமும் 32

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

| மலர் 7 | புதன்கிழமை 15-10-69 | இதழ் 6 |
|---|---|---|

# அண்ணல் காந்தி!

அஞ்சா நெஞ்சர் என்றும் அகிம்சாமூர்த்தி என்றும் துஞ்சா வீரர் என்றும் சுதந்திரத் தென்றல் என்றும் மகாத்மாகாந்தியை வாயார வாழ்த்துவதும் விழா எடுப்பதும் யார்க்கும் எளிது.

செயற்கரியனவற்றைச் செய்து பெரியார் ஆயினர் அவர். அவர் பெயரால் யார்க்கும் எளிய செயலைச் செய்து சிறியார் ஆகின்றனர் இன்றையவர்.

வேண்டப்படுவது அவர் கொள்கைகளைப் பின்பற்றுதல்; அக்கொள்கைகளை நடைமுறையிற் செய்துகாட்டுதல்.

அவர் அடக்கத்தைப் போற்றினார்; அடக்குமுறையை அழிப்பதற்கு அன்பைக் கருவியாக்கினார்; ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பினார்; ஒற்றுமையை நிலை நாட்டினார்; ஏழைகளைக் கண்டு இரங்கினார்; ஏற்றத் தாழ்வைப் போக்க உழைத்தார்; எல்லோரும் ஓர் குலம் என்றார்; எல்லோரும் இந் நாட்டு மன்னர்கள் என்றார். சாதியை, மொழியை, சமயத்தை வென்றார்; 'அகிம்சை-அகிம்சை' என்று அதற்காகவே உயிரையும் அளித்தார்!

அந்த அகிம்சா மூர்த்தியின் கொள்கைகள் இன்றைய உலகுக்கு அவசியம் வேண்டும். அதற்கு இந்தியா ஒரு வழிகாட்டியாக வேண்டும். காந்தீயம் கடுகளவேனும் இந்தியாவில் உளதா என்று வெளிநாட்டவர் ஐயப்படும் அளவுக்குப் பதவி வேட்கையும், ஊழல்களும், சாதி சமயச் சண்டைகளும் இன்று இந்தியாவில் தாண்டவம் ஆடுகின்றன.

கர்ந்திக்குச் சிறப்பு அவர் அவதரித்த திருவிடத்திலாவது காந்தீயம் வளர்ந்தோங்குவது தான்!

# சிரிக்கும் முல்லை

— இரசிகமணி கனக. செந்திநாதன் —

ஒரு கவிஞர் கண்ணீர் விடுகிறார். சாதிப் பிரச்சினை சமயப் பிரச்சினைக்காக வன்று. அரசியல் பிரச்சினைக்காகவும் அன்று. அவர் அவைகளுக்காகவும் நெஞ்சக் கண்ணீர் விட்டவர்தான். ஆனால் இப்போது அவர் உள்ளம் உருகுவது சாதாரணமான முல்லைக் கொடிக்காக. விடயம் ஏதோ சாதாரணமானது என்று நாம் பரவாய் பண்ணாமற் போய் விடலாம். ஆனால், கவிஞருக்குத்தான் அது பெரிய துன்பச் சுமையாகத் தோன்றுகிறது.

மாரித் துளி விழும்போது மணமகனைக் கண்ட இளம் பெண்போலப் பூரித்தெழுந்த முல்லை அது. பாருக்குழைத்து மகிழும் பண்புடைத் தொண்டர்கள்போல•ஊருக்குத் தண் மணம் வீசி உவந்த முல்லை அது. தன்னந் தனியாக வளராமல் மன்னி மருங்கில் வளர்ந்த மல்லிகை மங்கையோடு பின்னிப் பிணைந்து வளர்ந்த முல்லை அது.

அதை இன்று பார்த்தால்...... ஆ! என்ன கொடுமை! இப்படி யார் செய்தார்கள்? முல்லையை வளர்த்த மழையே அதற்கு எமனாகவும் வந்து வாய்த்தது. அற்பமாகத் தூறிய மழை சென்ற கிழமை 'சொரிமலர் அகிலப் பலமரம் முறியச் சோ'வெனப் பொழிந்துவிட்டது. அந்த வெள்ளத்தில் முல்லையின் அடி சரிந்து முற்றாக விழுந்துவிட்டது.

சிரித்த முல்லையை நிமிர்த்திப் பார்க்கவுமில்லை; சிரமம் கொள்ளவுமில்லை. உடனே அரிந்து வெட்டிக் குவித்துவிட்டார்கள். குழந்தையைக் கொல்வதுபோலக் கொன்றுவிட்டார்கள். அழகொழுக நின்று மணம் பரப்பிய முல்லைப் பெண் அடியற்று நின்ற இடமும் தெரியாது மறைந்துவிட்டாள். அதற்காக, ஆறாகக் கண்ணீர் பெருக்குகிறது ஒரு ஆத்மா!...... அவன் ஒரு கவிஞன்!

''சரிந்த முல்லைதனை நிறுத்தத் தக்கோரில்லையோ — பழந்
தன்மை யெண்ண உள்ள மெல்லாம் தளிர்க்கும் கொல்லையோ
அரிந்து வெட்டிக் குவிக்க நெஞ்சம் அரிய கல்லேயோ — அதில்
அழகுகண்டு மகிழுங் கூறு அணுவுமில்லையோ?
தெரிந்து தீமைசெய்யும் மாந்தர் செயலீதல்லையோ — இன்னும்
சிந்தை தன்னில் அன்பி ரக்கம் சிறிது மில்லையோ?
அரிந்த கட்டை தளிர்க்கும் காலம் ஆதலில்லையோ — ஐயோ!
அதற்கிடையில் அது வொழிந்து போதலில்லையோ?

தமிழனின்: அழகை இரசிக்கும் பண்பை, கல் நெஞ்சத்தை, அன்பிரக்கம் அற்ற தன்மையை ஆசிரியர் குத்திக் காட்டு கிறார். அன்புத் தமிழன் - அழகுத் தமிழன் - ஈவுஇரக்கமுற்ற தமிழன் என்றெல்லாம் பேசுகிறோமே. நடைமுறையில் என்ன நடக்கிறது? என்று தொட்டுக் காட்டுகிறார். ''அரிந்து வெட் டிக் குவிக்க மனம் அரிய கல்லேயோ?'' ''சிந்தை தன்னில் அன்பிரக்கம் சிறிதுமில்லையோ?'' என்று கேட்டுவிட்டு ''அரிந்த கட்டை தளிர்க்கும் காலம் ஆதலில்லையோ?'' என்று கேட்கிறாரே அதை நினைக்கும்போது ''காட்டாதன எல்லாம் காட்டி எமைப் பிரிந்தாய் மீட்டுமெங்கள் வீட் டினிலே விளையாட வாராயோ?'' என்று இறந்த குழந்தைக் காக அழுத ஒரு கவிஞரின் (ச. து. யோகியார்) நினைவு தான் எழுகிறது.

அடுத்த பாடலில் கவிஞர் இந்தக் கவிதையை வெறும் கண்ணீர்க் கவிதையிலிருந்து இலக்கியக் கவிதைக்கு உயர்த் துகிறார். பாரி வள்ளல் கொழு கொம்பின்றித் தவித்த முல் லைக் கொடிக்குத் தேரையே கொடுத்தானே, அந்தக் கதை யைக் கேட்டுமா நீ இப்படிச் செய்துவிட்டாய்? அந்தக் கருணை உள்ளம் தமிழர் மத்தியில் இருந்து உண்மையில் மறைந்துவிட்டதோ என்று கேட்கிறார் கவிஞர்.

''படர்ந்து நிற்கக் கொழுகொம் பின்றிப் பரிதபித்திட்ட — முல்லை
 பட்டபாடு கண்டு நெஞ்சம் பரிதபித்திட்ட
தொடர்ந்த கீர்த்திப் பாரிவள்ளல் செம்பொற் றேரினை — அது
 சேர்ந்து படர்ந்தேறு கொம்பாய்த் திகழ விட்டமை
கடந்த காலச் செய்தியாகிக் கழிந்து விட்டதோ — அந்தக்
 கருணை யுள்ளம் எங் கொழிந்து மறைந்து விட்டதோ
அடர்ந்த முல்லை! படர்ந்த முல்லை! அகன்று விட்டதே — என்
 அகத்தினின்று சிரிக்கும் முல்லை அகன்று விட்டதே!

முல்லை போய்விட்டது. அதை உருக்கமாகப் பாடிய கவி வாழுகிறது. இதைப் பாடியவர் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள். கவி அரங்குகளிற் பொருளோடு இனிமையும் கலக் கப் பாடுபவர். கந்தரோடை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யிற் பணி புரிபவர். அன்பும்-பண்பும் நிறைந்தவர். அதனுற் தான் வீழ்ந்த முல்லைகூட அவர் மனதை உறுத்தியது!

—✱✱—

# குடிசனம்

சி. சின்னையா புலவர்

சகல நாடுகளிலுமுள்ள அரசாங்கங்கள் மக்களினம் பெருகுவதை விரும்பவில்லை.

பெருகி வருகின்ற மக்களுக்கு உணவு, உடை முதலான வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படும் பொருள் களுக்கு வழிவகை செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத் தைச் சேர்ந்தமையினால்தான் குடிசனம் பெருகுவதை அர சாங்கங்கள் விரும்பாதது காரணம்.

மக்கள் பல்வேறு வகையான உணவுகளை வேறு நாடு களில் உபயோகிக்கப் பழகியிருந்தாலும் இலங்கை மக்கள் பிரதான உணவாக நெல்லரிசியையே சாப்பிட்டுப் பழகிய வர்கள்.

இலங்கையில் உற்பத்தியாகும் நெல் இலங்கை வாழ் மக்களுக்கு உபயோகிக்கப் போதாது. அதனால் அரசாங்கம் வேறு நெல் விளைவுள்ள நாடுகளிலிருந்து அரிசியைக் கொள் முதல் செய்யவேண்டியிருக்கின்றது.

கஷ்டப்பட்டுக் கொள்முதல் செய்கின்ற அரிசியை ஒரு கோடியே இருபத்து மூன்று லட்சம் மக்களுக்கு வாரத்துக்கு இரண்டு இருத்தல் வீகிதமாக இலவசமாகவே தற்போதைய அரசாங்கம் வழங்கிவருகின்றது.

குடிசனம் பெருகுவதை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்றும் அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டும் இருக் கின்றது.

இவையிவ்வாறாக ஒரு கிராமச் சங்கத்தில்; ஒரு பாராளு மன்ற உறுப்பினருமுட்பட ஒரு ஆடவன் இரு பெண்மணிகளை விவாகஞ் செய்து குடிசனப் பெருக்கத்தை விருத்தியாக்கு வதற்கு அரசாங்கம் சட்டமியற்றி அனுமதிக்க வேண்டு மென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறினால் அந்தக் கிராமச் சங்கத்தினுடைய புத்தி யெப்படி யென்பதை மக் களே ஆழ்ந்து சிந்தியுங்கள்.

பிள்ளைகளைச் சடப் பொருட்கள் போல அந்தக் கிராமச் சங்கம் நினைத்ததோ அல்லது பெற்றுத் தள்ளிவிடட்டும் அரசாங்கம் பட்டது பாடு என்று நினைத்திருக்கக்கூடுமோ தெரியவில்லை.

ஒரு பிள்ளைக்கு எவ்வளவு கடமைகள் பெற்றோர்களுக்கு ஏற்பட்டுள்ளதென்பதையும், அந்தப்பிள்ளை சமூகத்தில் எப்படி வாழ்க்கை நடத்திக் கழிக்க வேண்டுமென்பதையும் பெற்றோர்கள் கட்டாயமாகச் சிந்திக்கவேண்டும்.

அப்படியான சுயசிந்தனை பெற்றோர்களிடம் அமையுமானால் குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி அரசாங்கம் ஒரு சிந்தனையுஞ் செய்யத் தேவையே வராது.

விலங்கினம்போல மக்களினம் நடந்தால், மக்களுக்கும் விலங்குகளுக்கும் அறிவினால் பாகுபாடிருக்க முடியாது.

மக்கள் தாங்கள் பகுத்தறிவுள்ளவர்களென்று பெருமை பேசுவதும் வீண்.


வரதர் வெளியீடு

## 5-ம் வகுப்புப் பரீட்சைக்கு!

பரீட்சையில் வருவனபோன்ற புதிய மாதிரி வினாப்பத்திரங்கள் வெளிவந்துவிட்டன. பாடத் திட்டம் முழுவதையும் அடக்கித் தொகுக்கப் பெற்ற இவ் வினாப்பத்திரங்கள் மாணவருக்கு நல்ல மீட்டற் பயிற்சியுமாக அமைவதால் இவற்றைச் செய்து பயிலும் மாணவர் பரீட்சையில் நல்ல தேர்ச்சியடைவது நிச்சயம்!

பல வருட காலப் படிப்பித்தல் அனுபவமுள்ள
திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள் எழுதியவை.

| | | | |
|---|---|---|---|
| வினாப்பத்திரங்கள் | — | தமிழ் | சதம் 70 |
| வினாப்பத்திரங்கள் | — | கணிதம் | சதம் 70 |
| வினாப்பத்திரங்கள் | — | சூழல் | சதம் 70 |
| வினாப்பத்திரங்கள் | — | சைவ சமயம் | சதம் 70 |
| வினாப்பத்திரங்கள் | — | ஆங்கிலம் | சதம் 70 |

தொகையாக வாங்குவோருக்குத் தகுந்த கழிவுண்டு.

**ஆனந்தா அச்சகம் & புத்தகசாலை,**
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# 4. ஆபிரிக்கா — தெற்கு-கிழக்குப் பகுதிகள்

வி. கந்தவனம் பீ. ஏ.

## 1. சரித்திரத் தொடர்பு:

ஆபிரிக்காவின் தெற்கு, கிழக்குப் பகுதிகளை முதன்முதலாக வந்தடைந்த மேல்நாட்டவர் போர்த்துக்கேயராவர் (பத்தலோமிய டயசும் - வசுக்கொடகாமாவும்). அவர்கள் வருகைக்கு 150 வருடங்களின் பின்னர் ஒல்லாந்தர் தென் ஆபிரிக்காவைத் தமது வசிப்பிடமாகக் கொள்ளும்பொருட்டு வந்து சேர்ந்தனர். அவர்கள் 'போயர்' என அழைக்கப்படுவர். 19ஆம் நூற்றுண்டில் பிரித்தானியர் இப் பகுதியைத் தமது ஆட்சிக்குட்படுத்தினர். இன்று இங்குள்ள நாடுகளிற் பல அந்நியராட்சியிலிருந்து விடுதலைபெற்ற நாடுகளாய் உள்ளன.

ஐக்கிய தென்னுபிரிக்கக் குடியரசு இங்குள்ள ஒரு பரந்த நாடாகும். பின்வருவன இப்பகுதியிலுள்ள மற்றைய நாடுகளாகும்.

| நாடுகள் | பழைய பெயர்கள் |
|---|---|
| சாம்பியா | வட உரொடேசியா |
| தென் உரொடேசியா | —— |
| உகண்டா | —— |
| கினியா | —— |
| மலாவி | நயாசலாந்து |
| தென் சேனியா | தங்கனீக்காவும், சான்சிபாரும் |
| அங்கோலா | —— |
| பட்சுவாணு | பெசுத்தோலாந்து |
| உலுயேக்கோ | பெக்குவாணுலாந்து |
| மலாக்கி ஐக். குடியரசு | மடக்கசுகார் |

## 2. தரைத் தோற்றம் — காலநிலை:

ஆபிரிக்காவின் தெற்கு, கிழக்குப் பகுதிகள் உயர்ந்த மேட்டு நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. இப்பிரதேசம் பொதுவாக 3000அடிக்குமேல் உயர்ந்துள்ளது. கடற்கரைப் பகுதி ஒடுங்கிய சம வெளியைக் கொண்டுள்ளது. மேட்டு நிலத்தில் உயர்ந்த மலைகள் காணப்படுகின்றன. இவற்றுள் அதி உயர்ந்த மலைத் தொடர் திரேக்கன்சுபேக்கு ஆகும். தெற்குக் கடற்கரைச் சமவெளியிலிருந்து உயர் மேட்டு நிலப் பிரதேசம்வரை படிப்படியாக உயர்ந்துசென்று முடிவடையும் மேட்டுநிலப் பகுதி காரு என்றழைக்கப்படும். ஆபிரிக்காவின் அதியுயர்ந்த கிளிமஞ்சாரோ என்னும் சிகரம் தென்சேனியாவில் அமைந்துள்ளது.

ஒரேஞ்சும் அதனுடன் இணையும் வால் கங்கையும், இலிம்போப்போ, சாம்பசி என்பனவும் இங்குபாயும் பிரதான ஆறுகளாகும். ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள ஏரிகளிற் பெரும்பாலானவை இப் பகுதியில் அமைந்துள்ளன. அவை விக்ரோறியா, நயாசா, உருடோல்பு, அல்பேட்டு, தங்கனீக்கா முதலிய ஏரிகளாகும்.

ஆபிரிக்காவின் தெற்கு, கிழக்குப் பகுதிகளிற் பலவகையான கனிப் பொருட்கள் பெருமளவிற் காணப்படுகின்றன. ஆதலாற் சுரங்கத் தொழில் இங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றது. பிரதான கனிப் பொருட்களும் அவை காணப்படும் பகுதிகளும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| **பொற்சுரங்கங்கள்** | — | உரொடேசியா யொகனசுபேக்குக்கு அண்மையிலுள்ள பகுதிகள் |
| **வைரம்** | — | கிம்பளி |
| **நிலக்கரி** | — | நேத்தால், திரான்சுவால் |
| கூரைத்தகடு<br>பித்தளை<br>வெள்ளி<br>ஈயம் | — | சாம்பியா, தென் உரொடேசியா. |

கனிப் பொருட்கள், செம்மறியாட்டுரோமம், பழவகைகள் என்பன இப்பகுதிகளின் பிரதான வியாபாரப் பொருட்களாகும்.

4. பட்டணங்களும் மக்களும்:

இப்பகுதியின் பிரதான துறைமுகங்கள் தேபன், போட் எலிசபேத்து. கேப்ரவுண் என்பனவாகும். நைரோபி, பிறிடோரியா, யொகனசுபேக்கு, சலிசுபரி என்பன முக்கியமான பட்டணங்களாகும். இப்பட்டணங்களிற் குடியடர்த்தி கூடுதலாகவுள்ளது. இதற்குச் சமமானதாகத் தென் கிழக்குப் பிரதேசத்திற் குடித்தொகை பெருகிவருகின்றது. ஏனையபகுதிகளிற் குடியடர்த்தி குறைவாயுள்ளது.

ஆபிரிக்காவின் தெற்கு, கிழக்குப் பகுதிகளில் நீகிரோ இனத்தவர் பெரும்பான்மையினராக வுள்ளனர். போயர், ஐரோப்பியர், ஆசிய மக்கள் என்போரும் சிறுபான்மையோராய் வாழ்கின்றனர்.

இங்குள்ள புல்நிலங்கள் பல ஏற்ற கால நிலையைக் கொண்டுள்ளன. ஆயினும் அவை மேட்டு நிலமாக இருப்பதாற் குளிரானவையாயுள்ளன. கேப் பிரதேசத்தில் மத்தியதரைக் காலநிலை காணப்படுகின்றது. ஆபிரிக்காவின் தெற்கு கிழக்குப் பகுதிகள் கிழக்கிலிருந்துவரும் காற்றினால் அதிக மழையைப் பெறுகின்றன. இம்மழை உள் நாட்டை நோக்கிப் படிப்படியாகக் குறைந்துசெல்கிறது. மழை மிகவுங் குறைந்த மேற்குத் திசையிற் காலகாரிப் பாலைநிலம் அமைந்துள்ளது.

3. மக்கள் தொழில்:

இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். சோளம், கோதுமை, சோயம் (ஒருவகைத் தானியம்) என்பன இங்கு முக்கியமாக விளைவிக்கப்படுகின்றன. இவற்றுடன் பழவகைகள், பருத்தி, வெற்றிலை நிலக்கடலை என்பனவும் பயிரிடப்படுகின்றன. தென்சேனியா, கினியா, உகண்டா ஆகிய நாடுகளிற் கோப்பியும் தேயிலையும் அண்மைக் காலத்திலிருந்து சிறப்பாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. புல் நிலங்களிற் கால்நடை வளர்ப்பும் விவசாயத்தின் ஒரு பகுதியாக நடைபெறுகின்றது.

## வெற்றிமணி நேயர்களுக்கு!

# பொங்கல் மலர்

15-1-70ல் வெளிவரவிருக்கிறது.

— குறிப்பிட்ட பிரதிகளே அச்சிடப்படும். —

எனவே

பொங்கல் மலர் தேவையானோர்

இப்பொழுதே -/75 சதம் அனுப்பி

பெயரைப் பதிவு செய்து கொள்க.

15-1-70க்கு முன் சந்தா ரூபா 4/- செலுத்தும் ஒவ்வொருவருக்கும் மேலதிகப் பணம் பெறாது மலர் அனுப்பிவைக்கப்படும்.

---

வெற்றிமணி விற்பனை செய்யவும்
விளம்பரங்கள் சேகரிக்கவும்

★ முற்பணம் கட்டக்கூடிய ★

## விற்பனையாளர்கள் தேவை!

பிரதிக்கு 5 சதம் கமிஷன் உண்டு.

விபரங்களுக்கு எழுதுக:-

நிர்வாகி, வெற்றிமணி, முள்ளியவளை.

# அங்கலாய்ப்பு (46)

— மு. க. சுப்பிரமணியம் —

**ப**ல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சையை எடுத்துவிட்டு, பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் பாலு. பரீட்சை முடிவு என்னவாகுமோ என்ற ஏக்கம் அவனுக்கு! இதனால் பாடசாலைக்குப் போகாது நின்றான். அன்று காலை பத்துமணிபோல அவன் உடன் வகுப்பு மாணவன் இராசு, பாலு வீட்டுக்கு ஓடோடி வந்தான். ''பாலு எனது நல்வாழ்த்துக்கள்! பரிட்சையில் தேறிவிட்டாய்'' என்றான் இராசு. பாலுவுக்கு இருந்த சந்தோஷத்திற்கு எல்லையில்லை. அவன் இராசுவுக்கு நன்றி தெரிவித்துவிட்டு அவனுடன் பாடசாலைக்குச் சென்றான். தன் ஆசிரியருக்கு நன்றி தெரிவித்ததோடு உடன் மாணவர்களையும் - ஆசிரியரையும் அன்று பிற்பகல் நான்கு மணிக்கு, தேநீர் விருந்துக்குத் தன் வீட்டுக்கு வரும்படி கூறித் திரும்பினான்.

இராசு மூன்று மணிக்கே பாலு வீட்டுக்கு வந்துவிட்டான். விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்தன. இராசுவும் கூடநின்று வேண்டிய உதவிகளைச் செய்தான். ஆசிரியரும், மாணவர்களும் வந்ததும் அவர்களை வரவேற்று அமரவேண்டிய இடங்களில் அமரச் செய்தனர். இராசுவும் அவர்களுடன் இருந்தான். பலவகையான பலகாரங்கள், இனிப்பு வகைகள், குளிர் பானங்கள், பழ வகைகள் யாவும் வைக்கப்பட்டிருந்தன. இராசு விறுவிறென்று எடுத்து முழுமையாகவே வாயிற் திணித்தபடியிருந்தான். வாயிலே இருப்பதைச் சாப்பிட்டு முடியுமுன் இரண்டு கைகளிலும் நிறைய எடுத்து வைத்துக்கொள்வான். மற்றவர்களோ ஆறுதலாக, சிறுசிறு பகுதியாக உண்டனர். ஆறுதலாகச் சாப்பிட்டால் மற்றவர்களிலும்கூடத் தான் சாப்பிடமுடியாது என்ற எண்ணம் இராசுவுக்கு. இவனது அங்கலாய்ப்பைக் கண்ட ஆசிரியர் மெதுவாக இராசுவைத் தனியிடத்துக்குக் கூட்டிச் சென்றார். ''இராசு! இப்படி மற்றவர்கள் முன்னிலையிற் செய்யக் கூடாது. ஒரு காலமும் காணாத சாப்பாடு வகைகளா? ஏன் இந்த அங்கலாய்ப்பு. அப்படித் தேவையென்றால் எல்லோரும் சாப்பிட்டுச் சென்றபின் அல்லது அதற்குமுன் தனிமையாகச் சாப்பிடுவதல்லவா நல்ல பழக்கம். நீ மாத்திரம் சாப்பிட்டாற் போதுமா? நீ சாப்பிடுவதன்முன் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும் ஆறுதலாக அழகாகச் சாப்பிடவேண்டும். நீ மாத்திரம் சாப்பிட்டாற் போதும் என்ற சுயநலம் இருக்கக் கூடாது. அங்கலாய்ப்பு உள்ள பிள்ளைகளை எவரும் விரும்பமாட்டார்கள்'' என்று கூறினார். இராசு ''ஆம்! இனிமேல் யான் இப்படி நடந்துகொள்ள மாட்டேன்'' என்று கூறித் தன் செயலுக்காக வெட்கப்பட்டான்.

## மகாத்மாவின் மணிமொழிகள்!

''பாடப் புத்தகங்களின் அவசியத்தைக் குறித்துப்பிரமாதமாகக் கூறப்படுகிறது ஆனால் அவை அவசியமென்று எனக்குத் தோன்ற வில்லை. கிடைத்த பாடப்புத்தகங்களைக்கூட நான் அல்வளவாகப் பயன்படுத்திக்கொண்டதாக எனக்கு நினைவில்லை. ஏராளமான புத்தகங்களைப் பிள்ளைகளின்மேற் சுமத்துவது அவசியம் என்பதையும் நான் காணவில்லை. மாணவருக்கு உண்மையான பாடப் புத்தகம் உபாத்தியாயரே என்பதை நான் எப்பொழுதும் உணர்ந்து வந்தேன் என் உபாத்தியாயர்கள் புத்தகங்களிலிருந்து எனக்குச் சொல்லிக் கொடுத்த எதுவும் எனக்கு நினைவில் இல்லை. ஆனால் புத்தகங்களைக் கொண்டல்லாமற் தனியாகவே அவர்கள் எனக்குச் சொல்லிக் கொடுத்தவையெல்லாம் இப்பொழுதுகூடத் தெளிவாக என் நினைவிலிருக்கின்றன.''

''நான் பொய்யனாகவிருந்துகொண்டு உண்மை பேசும்படி மாணவர்களுக்குப் போதிப்பது என்பது வீண்வேலை. தாம் கோழையாக இருக்கும் ஓர் உபாத்தியாயர் தம்மிடம் படிக்கும் மாணவர்களை வீரர்களாக்கிவிட முடியாது. புலனடக்கம் என்பதே தெரியாத ஓர் ஆசிரியர் புலனடக்கத்தை மாணவர்களுக்குப் போதித்துவிடவும் முடியாது.''

''சத்தியத்தைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதை என் மாதிரியான என்னுடைய அநுபவங்கள் எனக்கு உறுதியாக உணர்த்தியிருக்கின்றன.''

''பிரபஞ்சம் அனைத்திலும் நிறைந்து நிற்பதான சத்தியசொரூபத்தை நேருக்கு நேராக ஒருவர் தரிசிக்க வேண்டுமாயின் மிகத் தாழ்ந்த உயிரையும் தன்னைப் போலவே நேசிக்க முடிந்தவராக அவர் இருக்கவேண்டும்.''

★
* *

## வாழ்க மணமக்கள்

மணமகன்:

செல்வன்: க. நடராசா
M. R. I (Cey) M. S, R. I. (India)
இராஜன் றேடியோ (எலெக்)
நெல்லியடி.

மணமகள்:

செல்வி: கு. தவமலர்
கோவில் தோட்டம்,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

## 3. பேரேட்டில் நடவடிக்கைகளைப் பதிதல்

**பேரேடு**

| பற்று மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | வரவு ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **நிலம் கட்டிடக் கணக்கு** | | | | | | | |
| தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 15000-00 | | | | | |
| | | **தளபாடக் கணக்கு** | | | | | | | |
| தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 1500-00 | தை | 10 | விற்பனை | கா | 420-00 |
| | | | | | ,, | 10 | நட்டம் | மு. நா. | 80-00 |
| தை | 10 | கொள்வனவு | கா | 600-00 | ,, | 31 | பெறுமானக் குறைவு | ,, ,, | 50-00 |
| | | **முதலீடு கணக்கு** | | | | | | | |
| தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 5000-00 | | | | | |
| | | **சரக்கு இருப்புக் கணக்கு** | | | | | | | |
| தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 3750-00 | | | | | |
| | | **கொடுத்த கழிவுக் கணக்கு** | | | | | | | |
| தை | 31 | காசேட்டால் | கா | 275-00 | | | | | |
| | | **பெற்ற கழிவுக் கணக்கு** | | | | | | | |
| | | | | | தை | 31 | காசேட்டால் | கா | 275-00 |
| | | **நாதன் கணக்கு** | | | | | | | |
| தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 1750-00 | தை | 6 | காசு | கா | 650-00 |
| | | | | | ,, | ,, | கழிவால் | கா | 100-00 |
| தை | 20 | விற்பனை நாளேட்டால் | வி. நா. | 2850-00 | ,, | ,, | உண்டியலால் | வ. உ. ஏ. | 1000-00 |
| தை | 30 | சில்லறைக் காசேட்டால் | சி. கா. | 5-00 | ,, | 23 | உட்டிரும்பிய சரக்கு | உ. தி. ஏ. | 350-00 |

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|

### தேவன் கணக்கு

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 2500-00 | தை | 15 | கா்சால் | கா | 825-00 |
| தை | 25 | விற்பனை நாளேட்டால் | வி. நா. | 3200-00 | ,, | ,, | கழிவால் | கா | 175-00 |
| | | | | | ,, | ,, | உண்டியலால் | வ. உ. ஏ. | 1500-00 |
| | | | | | ,, | 27 | உட்டிரும்பிய சரக்கு | ,, | 200-00 |
| | | | | | ,, | 29 | காசால் | கா | 1600-00 |
| | | | | | ,, | ,, | அறவிடமுடியாக் கடன் | மூ. நா. | 1400-00 |

### ஆனந்தன் கணக்கு

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 8 | காசு | கா | 425-00 | தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 1500-00 |
| தை | 8 | கழிவு | கா | 75-00 | ,, | 20 | கொள்வனவு நாளேட்டால் | கொ: நா. | 1950-00 |
| தை | 8 | உண்டியலால் | செ. உ. ஏ. | 1000-00 | | | | | |
| தை | 23 | வெளித்திரும்பிய சரக்கு | வெ. தி. ஏ. | 250-00 | | | | | |

### குமரன் கணக்கு

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை | 17 | காசு | கா | 800-00 | தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 2000-00 |
| தை | 17 | கழிவு | கா | 200-00 | | | | | |
| தை | 17 | உண்டியல் | செ. உ. நா. | 1000-00 | தை | 25 | கொள்வனவு நாளேட்டால் | கொ. நா | 2300-00 |
| தை | 31 | திருப்பிய சரக்கு | வெ. தி. ஏ. | 300-00 | | | | | |

### மூலதனக் கணக்கு

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தை | 1 | மீதி (கீ. கொ. வ.) | ஐ | 29250-00 |

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | **விற்பனைக் கணக்கு** | | | | | |
| | | | | | தை | 2 | காசுக்கு | கா | 2500-00 |
| | | | | | தை | 4 | காசோலைக்கு | கா | 2600-00 |
| | | | | | தை | 24 | காசுக்கு | கா | 3500-00 |
| | | | | | தை | 31 | நாளேட்டால் | வி.நா. | 6050-00 |
| | | | | **கொள்வனவுக் கணக்கு** | | | | | |
| தை | 2 | காசால் | கா | 2000-00 | | | | | |
| தை | 4 | காசோலையால் | கா | 2250-00 | | | | | |
| தை | 31 | நாளேட்டால் | கொ.நா. | 4250-00 | | | | | |
| | | | | **உட்டிரும்பிய சரக்குக் கணக்கு** | | | | | |
| தை | 31 | நாளேட்டால் | நா.உ. | 550-00 | | | | | |
| | | | | **வெளித்திரும்பிய சரக்குக் கணக்கு** | | | | | |
| | | | | | தை | 31 | நாளேட்டால் | வெ.தி.ஏ. | 550-00 |
| | | | | **வருமதி உண்டியல் கணக்கு** | | | | | |
| தை | 31 | நாளேட்டால் | வ.உ.ஏ. | 2500-00 | | | | | |
| | | | | **சென்மதி உண்டியல் கணக்கு** | | | | | |
| | | | | | தை | 31 | நாளேட்டால் | செ.உ.ஏ | 2000-00 |
| | | | | **வெற்றுப்பொருள் விற்பனைக் கணக்கு** | | | | | |
| | | | | | தை | 24 | காசுக்கு | கா | 150-00 |
| | | | | **பெற்ற தரகுக் கணக்கு** | | | | | |
| | | | | | தை | 26 | காசு | கா | 300-00 |

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **சில்லறை வருமானக் கணக்கு** | | | | | | | | | |
| | | | | | தை | 28 | காசு | கா | 400-00 |
| **பெற்ற வட்டிக் கணக்கு** | | | | | | | | | |
| | | | | | தை | 31 | முதலீட்டால் (காசு) | கா | 25-00 |
| **ஈட்டுக் கடன் கணக்கு** | | | | | | | | | |
| | | | | | தை | 31 | நிலம் கட்டிடம் | கா | 5000-00 |
| **கொள்வனவுச் செலவு கணக்கு** | | | | | | | | | |
| தை | 22 | காசு | கா | 150-00 | | | | | |
| **விற்பனைச் செலவுக் கணக்கு** | | | | | | | | | |
| தை | 22 | காசு | கா | 100-00 | | | | | |
| **வாடகைக் கணக்கு** | | | | | | | | | |
| தை | 26 | காசு | கா | 150-00 | | | | | |
| **சம்பளக் கணக்கு** | | | | | | | | | |
| தை | 28 | காசு | கா | 300-00 | | | | | |
| **கொடுத்த வட்டி** | | | | | | | | | |
| | | | | | தை | 31 | வங்கி வட்டி | கா | 20-00 |
| **அறவிடமுடியாக் கடன் கணக்கு** | | | | | | | | | |
| தை | 29 | தேவனுல் | மு.நா. | 1400-00 | | | | | |
| **பெறுமானக் குறைவு கணக்கு** | | | | | | | | | |
| தை | 31 | தளபாடத்தால் | மு.நா. | 50-00 | | | | | |

| மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் | மீ | திகதி | விபரம் | பக்கம் | ரூபா சதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **தளபாட விற்பனை நட்டக் கணக்கு** | | | | | | | |
| தை | 10 | தளபாட நட்டம் | மு.நா. | 80-00 | | | | | |
| | | **தபாற் செலவுக் கணக்கு** | | | | | | | |
| தை | 31 | சில்லறைக் காசேட்டால் | மு.கா. | 15-00 | | | | | |
| | | **கூலிக் கணக்கு** | | | | | | | |
| தை | 31 | சில்லறைக் காசேட்டால் | சி.கா. | 23-00 | | | | | |
| | | **பிரயாணச் செலவுக் கணக்கு** | | | | | | | |
| தை | 31 | சில்லறைக் காசேட்டால் | சி.கா. | 15-00 | | | | | |
| | | **சில்லறைச் செலவுக் கணக்கு** | | | | | | | |
| தை | 31 | சில்லறைக் காசேட்டால் | சி.கா. | 22-00 | | | | | |

குறிப்பு:— இப் பேரேட்டின் பக்கம் என்ற நிரலில் இடப்பட்டுள்ள எழுத்துக்கள் அந்நடவடிக்கைகள் எங்கிருந்து அக் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டன என்பதைக் காட்டுவதற்காக இடப்பட்டன.

ஐ: ஐந்தொகை, கா: காசேடு, சி. கா. சில்லறைக் காசேடு, வி. நா. விற்பனை நாளேடு
கொ. நா. கொள்முதல் நாளேடு உ. தி. ஏ. உட்டிரும்பிய சரக்கேடு வெ. தி. ஏ. வெளித்திரும்பிய சரக்கேடு
வ. உ. ஏ. வருமதி உண்டியலேடு செ. உ. ஏ. சென்மதி உண்டியலேடு மு. நா. முறையான நாளேடு

❋ வியாபார நடவடிக்கைகளைப் பேரேட்டுக்கு மாற்றும் விதிகளை மீண்டும் ஒரு முறை வாசித்து இப்பதிவுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க.

— தொடரும்

# நேயர் குரல்

சி. தருமநாதன்,
வட-அல்லை,
அல்வாய்.

அன்பு வெற்றிமணி ஆசிரியருக்கு!

தாங்கள் வெளியிடும் வெற்றிமணிப் பத்திரிகையை நாம் கவிஞர் சுந்தரம்பிள்ளை மூலம் பெறுகிறோம். சிறுவரும், மாணவரும் வெற்றிமணியால் மிகவும் பயனடைவர். அதனால் திங்கள் இருமுறை வெளியிட்டால் நல்லது என நான் எண்ணுகிறேன்.

வாழ்க வெற்றிமணி!

சி. நவரத்தினம்,
இமையாணன்.

வெற்றிமணி ஆசிரியருக்கு!

கவிஞர் சுந்தரம்பிள்ளை வெற்றிமணியை அறிமுகம் செய்துவைத்தார். இக் காலத்தில் வெளிவரும் சில ஆபாசப் பத்திரிகைகளின் மத்தியில் வெற்றிமணி தனது வெற்றிஓசையைப் பரப்பவேண்டுமானல் பற்பல புது அம்சங்கள் புகுத்தப்பட வேண்டும். சிறுவர்களும் கல்வி கற்கும் மாணவர்களும் அவசியம் வெற்றிமணியை வாசிக்கவேண்டும்!

# மாணவர் மன்றம்

44. செல்வி தெய்வநாயகம் பொன்னுத்துரை,
இல. 32, வள்ளி புனம், வ/புதுக்குடியிருப்பு.
45. சி. சண்முகலிங்கம், அ. த. க. பாடசாலை, தி/கிளிவெட்டி.
46. சி. நவரத்தினம், தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி.
47. ச. மகாலிங்கம், வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை.
48. நா. நடனசபாபதி, குமுழமுனை, முள்ளியவளை.

# கட்டுரைப்போட்டி விதிகள்

1. மாணவர் மன்ற அங்கத்தவர்கள் மாத்திரம் இப்போட்டியிற் பங்குபற்றலாம்.
2. ஒருவர் ஒரு கட்டுரை மாத்திரம் அனுப்பலாம்.
3. கட்டுரையுடன் கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. குறிப்பிட்ட சொற்களுக்குமேல் கட்டுரை இருக்கக் கூடாது.
5. கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும்.
6. போட்டி முடிவு திகதிக்குப் பின் கிடைக்கும் கட்டுரைகள் போட்டிக்குச் சேர்கப்படமாட்டா.
7. முன் வெளிவந்த, வேறு ஒருவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின்றிச் சுயமாக எழுதப்படும் கட்டுரைகளை அனுப்புக.




# பரவுமோ காந்தி கொள்கை?

—:-: சா ர தா :-:—

காந்தி யென் ருல்ம காத்மா
காந்தி யென் றேயு ரைப்பர்;
சாந்தி யென் ருல வர்சொல்
சத்திய நெறிதான் என்பர்
பாந்த மாய்உலக முய்யும்
பாதையைக் காட்டி வாழ்ந்த
காந்தமாங் காந்தி யாரைக்
கருதுவ திவ்வாறே தான்!

ஆங்கில ராட்சியின் கீழ்
அடிமைக ளாய்க் கிடந்து
தூங்கிய பார தர்க்குத்
துடிதுடிப் புணர்ச்சி யூட்டிக்
'காங்கிரஸ்' இயக்க மூலம்
கடும்பல தியாகஞ் செய்து;
நீங்கிய சுதந் திரத்தை
நிதானமாய்ப் பெறவு ழைத்
தான்!

ஆயுத பலத் திஞலே
ஆங்கில ரடக்கும் போதும்;
நேயநற் சாத்வீ கத்தின்
நெறியிலே நின்றெ திர்த்தே,
ஒயுத லின்றிச் செய்த
உத்தம தியாகத் தாலே,
தூயநற் சுதந்தி ரத்தின்
சோதியைத் துரந்து பெற்ருர்!

மதநிற மொழிக ளாதி
மானுட வெறியைப் போக்கி
இதமுறு சமத் துவத்தில்
யாவரு மிணைந்து வாழ
உதவினன்; பலாத்கா ரப்போர்
உணர்ச்சியில் ஊறி நிற்றல்
அதர்ம மென்று ரைத்(து)
அகிம்சை
அறநெறி கொண்ட வீரன்!

இயந்திரப் பெருக் கத்தாலே
இந்தியர் தொழிலின் சக்தி
பயன்படா தொழிய, நாட்டிற்
பரவிடும் பஞ்ச மென்றே
உயர்பெருங் கதரி யக்கம்
ஒன்றினை யூக்கு வித்தான்;
துயர்ப்படு வோரின் உண்மைத்
தொண்டனுந் தூய காந்தி!

எத்தனை கோணத் தின்கண்
யாரிருந் தாராய்ந் தாலும்
உத்தமன் என்ற தீர்ப்பு
ஒன்றையே காண வைக்கும்
அத்தனை பெருமை மிக்க
அமரனின் நூரு மாண்டைப்
பக்தியாய்ப் பார் கொண்டாடும்
பரவுமோ காந்தி கொள்கை?

★

★

# விபுலானந்தர் புகழ் வாழ்க!

"சம்மாந்துறை அசீஸ்"

திக்கெட்டும் புகழ்மணக்கும் விபுலானந்த
தேசிகனைக் கலைத்தாயின் செல்வச்சேயை
எக்காலும் புகழ்குன்ற யாழ்நூல்தந்த
ஏந்தலினைப் பாராட்டிப் புகழவேண்டும்
தக்கபெரு நிதியாக ஈழம்கண்ட
தமிழூற்றை வற்றாத கல்வியாற்றை
இக்கணமே சிலைவடித்துப் புகழவந்த
ஈழத்தாய் உன்னடியைப் பணிகின்றேன் நான்.

சக்கரையோ கற்கண்டோ தேனோபாகோ
சவ்வாதோ உன்பெருமை கூறுதற்கு
அக்கணமே மக்களுணர் வெல்லாம்கண்ட
அமுதமலர்க் கொத்தேஅரும் பணியேசெய்தாய்
முக்கியமே அத்தினத்தில் வீணைதாங்கி
முன்வந்தாள் கலைமகளுன் புகழைப்பாட
திக்கெட்டும் ஈழமணித் தேசமெங்கும்
திகட்டாத திரவியமே நீடுவாழ்க!

* ★
★ *

# சிட்டுக் குருவி

—: அழகனூர் :—

சிட்டுச் சிட்டுச் சிட்டெனச்
திருப்பித் திருப்பிச் சொல்லியே
பட்டு மென்மைச் சிறகினால்
பறந்து வானில் செல்லுதாம்.

உச்சி வானில் ஏறியே
உயரச் சென்று முடிவிலே
அச்சம் இன்றித் தரையினை
அடைவ தற்கு வீழுதாம்.

ஊசி போன்ற மூக்கினால்
உடைத்து டைத்துத் தானியம்
கூசி டாமல் வாசலில்
கொறித்துக் கொறித்துத் தின்னுதாம்!

# இயற்கை எழிலுடன் இலங்குவதேன்?

—: சௌமினி :—

மெல்லிய தென்றற் காற்றினிலே
மென்னகையாய் மலர் சிரிப்பதென்ன?
நல்லவ ராகிய பெரியவரை
நங்கையே நீஇன்று பணிந்ததனுல்.

பறந்திடும் பறவைகள் இன்றுமிக
பரிவுடன் கீதம் இசைப்பதென்ன?
சுறுசுறுப் புடன்நீ அம்மாவுக்கு
சுந்தரியே மிக உதவியதால்.


கடும்வெயில் இன்று காயாமல்
கடுமை யகற்றித் தணிவதென்ன?
கொடும் சினந்தன்னை அடக்கிவிட்டு
கோதையே நீயும் இருப்பதனுல்.

இதமான வெயிலில் உலகமெலாம்
இயற்கை அழகுடன் பொலிவதென்ன?
வதம் புரியாமல் உயிர்களிடம்
வஞ்சியே நீஅன்பு கொண்டதனுல்.

சின்னஞ்சிறிய அழகு மலர்
சிறந்த நன்மணத்தைத் தருவதென்ன?
என்னரும் தங்கையே நீஇன்று
எதிர்த்துப் பேச மறந்ததனுல்.

வாழையின் மதர்த்த இளங்குருத்து
வடிவுடன் மெல்ல விரிவதென்ன?
கோள்சொல்லும் வழக்கத்தை இன்றுடனே
கோதையே நீயும் விட்டதனுல்.

இன்று இயற்கை முழுவதுமே
எழிலுடன் காட்சி தருவதென்ன?
இன்றுபோல் என்றும் நீயிருந்தால்
எல்லாம் மகிழ்வுடன் ஆசிதரும்!




# தம்பிக்கு!

—செல்வி இரா. சரசுவதி,
7 ஆவது, கோட்டக்கொடை, ஸ்பிறிங்வல்லி.

அன்புள்ள ஆனந்தா!

அக்காவின் நல்லாசிகள்! எங்கும் - எல்லோர் இல்லங்களிலும் சந்திரப் பயண சாதனையைப்பற்றி வியப்பாகப் பேசியும், வானொலியிற் கேட்டும், செய்தித் தாள்களிற் படித்தும் பெரும் ஆர்ப்பாட்டமாகவிருந்த வேளையில், உன் மடல் என் கரங்களிற் தவழ்ந்தது. அதைப் படித்ததும் அழுவதா? சிரிப்பதா? என்று தோன்றவில்லை எனக்கு. ....ம்! நீ இப்பொழுது விஞ்ஞானப் பட்டதாரி அல்லவா? அதனால் அப்பா படித்துச் சொன்ன பாரதம், இராமாயணம் போன்ற இலக்கியப் புதையல்களின்கண்வரும் சாதனைகளை மறந்துவிட்டாய் போலும்!

வாழ்க்கைக்கு விஞ்ஞானந்தான் பெரிது; விஞ்ஞானமின்றேல் மனிதன் அஞ்ஞான இருளில் மூழ்கித் தத்தளிப்பான் என்றும், விஞ்ஞானம் தோன்றியதன் பலாபலனே பற்பல சாதனைகளை மனிதன் செய்துவருகிறான் என்றும் எழுதியிருந்தாய். உன் கூற்றை என்னால் ஒப்புக்கொள்ள இயலாது ஆனந்தா. விஞ்ஞானம் வாழ்க்கைக்கு ஓரளவு வேண்டுந்தான். அதற்காக வாழ்க்கை முழுவதும் இயங்க விஞ்ஞானந்தான் பெரிது என்று கூறலாமா? ஆனந்தா! இவ்வுலகம் தோன்றிய காலையில், அதனோடு விஞ்ஞானமும் இணைந்து தோன்றியதா? இல்லை! இவ்வற்புதம் நிறைந்த உலகினைப் படைத்தவன் யார்? விஞ்ஞானியா? அப்படி என்றால் எந்த விஞ்ஞானி என்று நீ கூறுகிறாய்? அதற்காக அந்த விஞ்ஞானி எத்தனை கோடி செலவழித்தான்? என்ற விபரங்களை அறிய உன் சிந்தனைத் தேரைச் செலுத்தி விடை காண்பாயாக!

ஆனந்தா! விஞ்ஞானம் தோன்றியதால் மனிதன் நாகரீகமாக வாழ்கின்றான்; நலமான வாழ்க்கை பெற்றுள்ளான்; என்று நீ கூறலாம். இன்னும் பலருங் கூறலாம். ஆனால், அமைதியின்றியும், அல்லற்பட்டும், அஞ்சியும், கெஞ்சியும் வாழ்கின்றான் மனிதன் என்பதை மறைக்கமுடியுமா? மறுக்க முடியுமா? விஞ்ஞானம் மனிதனை அஞ்ஞான இருளிலிருந்து விலகச் செய்துளது என்று எப்படி வாதாடலாம்? விஞ்ஞானப் பெருமைகளை வாதாடுவதைவிட்டு மனிதனுக்கு வேண்டியன என்ன என்பதனைச் சிந்திப்போமாக!

''உடல் - உள்ளம் இரண்டிற்கும் நவீன நாகரீகத்தினால் ஏற்படும் கெடுதலான விளைவுகளைத்தான் சொல்லுகிறேன். உள்ளம் தூய்மை இழந்து கெடுகிறது. செயற்கைக்கு அடிமையாகிய உடல் இயற்கையாக ஏற்படக்கூடிய இறப்பை, அதற்குரிய காலத்திற்கு முன்பாகவே கூவிக்கூவி அழைக்கிறது. இதுதான் நாகரீகத்தின் சின்னம்; கொடூர விளைவு!'' என்கிறார் ஈன்ஸ்டின் என்ற அறிஞர். இதன் கருத்தென்ன ஆனந்தா? சாந்தியும்-சமாதானமும்கொண்டு அமைதியாக வாழவேண்டிய மனிதன், ஆர்ப்பாட்டமும் - போராட்டமும் பூண்டு தன்னைத் தானே அழித்துக்கொள்கிறான். ஆம்! ஆக்கவேலைகளுக்கு விஞ்ஞானம் பயன்படுகிறதென்று சொல்லிக்கொண்டு, அழிவுவேலைகளுக்கும் விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தலாமா? எனவே, விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் மனதைப் பக்குவம் அடையச் செய்வதற்குப் பதிலாகப் பரபரப்புடன் இயங்கவைக்கிறது என்பதை ஈண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனந்தா! விஞ்ஞானியானவன் வானொலியைப் படைத்தான். ஆனால், வானத்தைப் படைக்கவில்லை. வானக் கப்பலைப் படைத்தான்; ஆனால், ஆழ்கடலைப் படைக்கவில்லை. மின்னொளியைப் படைத்தான்; ஆனால் மேகத்தைப் படைக்கவில்லை. இவ்வாறு செயற்கை முறையில் விஞ்ஞானம் படைப்போர் இயற்கைச் சக்திகளைப் படைக்காதவரையில் யாம் ஒன்றை நினைவிற்கொள்ளவேண்டும். அஃதாவது மனிதனானவன் ஒரு அளவிற்குட்தான் தனது சக்தியைச் செலவழிக்க இயலுமேயன்றி, அளவு மீறிச் செல்ல இயலாது. அப்படியே சென்றாலும், அவர்களின் முடிவு என்னவாகும் தெரியுமா? ''நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்

உயிர்க்கிறுதி யாகிவிடும்'' ஆம். ஆனந்தா! முயற்சியும் - ஊக்கமும் எமக்கு இருக்கத்தான் வேண்டும். அதற்காக அளவு கடந்தால்...! மரத்தின் நுனிக்கு அப்பாற் செல்ல நினைத்து உயிர்க்கே உலைவைப்பதைப் போலாகிவிடும். எனவே அவனின்றி ஓர்அணுவும் அசையமுடியாது ஆனந்தா! எமக்கு வேண்டியது விஞ்ஞான விந்தைகளல்ல. அமைதியும், சாந்தியும் ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்விலும் கிடைக்கவேண்டும். அப்பொழுதுதான் நாடுசிறப்படையும். செழிப்புறும். இந்த அமைதியும், சாந்தியும் அளிப்பது யார்? இறைவனைவிட வேறுயாராக இருக்கமுடியும்.

ஆனந்தா! பரபரப்பு நிறைந்த உலகில் யாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனுற் சிந்தனை வளமின்றி, ஆகா! ஓகோ! என்று வியப்புறும் மனிதக் கூட்டங்கள்தாம் மிகுதியாக உள்ளன. இவ்வாறு நீயும் வாழக்கூடாது என்பதே என் அவா! ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பதை உன் சிந்தனைக்குவிட்டு, 'சந்திர மண்டலப் பயணம் மனித இனத்திற்கு நன்மை பயக்குமா?' என்பதற்கு விடை பகருமாறு கேட்டு, என் மடலை நிறைவு செய்து கொள்கிறேன். மீண்டும் மறுமடலிற் சந்திப்போம்!

சுபம்.

இவ்வண்ணம்,
அன்பு அக்கா,
'' ஆனந்தி''

*—*—*

உருவகக் கதை

## ஆணவம்

—( கே. எம். பாறூக், மெயின் வீதி, பதியதளாவ. )—

அன்றாட வாழ்க்கைச் செலவுக்காக இரவு-பகலென உழைக்கிறான் மனிதன். இந்த உழைப்பிற்தான் எத்தனை விதம்! களவெடுப்பதையே தொழிலாகக் கொள்கிறான் ஒருவன். கூலிவேலை செய்து பிழைக்கிறான் இன்னொருவன். அடிமையாய் வாழ்ந்து பிழைக்கிறான் மற்றொருவன். அரசாங்க உத்தியோகத்தால் பிழைக்கிறார்கள் சிலர். அப்பப்பா வயிற் றைக் கழுவுவதற்காக எத்தனை எத்தனையோ விதம்.

அந்த ஊரில் அவனும் ஒரு தொழிலாளி. களவெடுத்தோ அடிமையாய் வாழ்ந்தோ அரசாங்க உத்தியோகத்திலோ இல்லை. அவனும் ஒரு சாதாரண தொழிலாளி. தன் உருக்குப்போன்ற கரங்களைக்கொண்டு உண்மையுடன் உழைக்கும் தொழிலாளி. அவனின் அற்பத் தொழில்தான் விறகு வெட்டி விற்பது. வழமைபோல் தனது கோடரியை தோழில் போட்டுக்கொண்டு அடர்ந்த காட்டு வழியே நகர்ந்து செல்கிறான். அந்தக் காட்டு மத்தியில் தனி இடமொன்றைத் தனக்கென ஏற்படுத்திக்கொண்டு வளைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்தது அந்த ஆறு.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரைக்கும் நீராடக் கொடுத்து நிரந்தரமான இடத்தில் நிம்மதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த ஆற்றங்கரையோரத்தில் நீண்டு வளர்ந்து வாலிபப் பருவத்தைக் கடந்து வயோதிபப் பருவத்தை எட்டிப் பிடித்துக்கொண்டு நிற்கிறது அந்தப் பட்ட மரம். ஆற்றில் நீராட வருபவர்களுக்குத் தனிக் கவர்ச்சி ஒன்றைக் கொடுத்து ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றிற்கு மேலும் மெருகூட்டி நின்றது.

அந்த விறகுவெட்டியின் கழுகுப் பார்வைக்கு அந்தப் பட்ட மரம் எப்படியோ பட்டுவிட்டது. மரத்தை நோக்கி மனிதன் விரைகிறான். நல்ல விறகுக்கேற்ற மரம் கிடைத்து விட்டதென்ற மகிழ்ச்சி, 'டொக்-டொக்-டொக்' உருக்குப் போன்ற அவனது கரத்திலிருந்த கோடரிதான் இந்தப் பரிதாப ஒலியைப் பரப்பிக்கொண்டிருந்தது.

''பகுத்தறிவு படைத்த மனிதா! இயந்திர வேகத்தில் என்னை அழிப்பதில் முற்பட்டுக் கொண்டிருக்கிறாயே! சற்றுக் கூடச் சிந்தித்துப் பார்த்தாயா? என்னை அழிப்பதில் என்ன சுகத்தைக் காண்கிறாய்? நீ மட்டும் ஏன் பொறாமைகொண்டு என்னை அழிக்க முயலுகிறாய்; சற்றுச் சிந்தித்துப்பார். அந்த மனிதனுக்கு ஏதோ ஆறுதல் கூறியது மரம்.

''பட்ட மரமே என்ன உளறுகிறாய்? எனக்குப் புத்தி கூறுமளவுக்கு என்னைவிட நீ உயர்ந்தவனா? உன்னை என்னால் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும். சாகப் போகிற நேரத்திலா சமாதானம் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறாய்' அவனது பதிலில் ஆணவம் அளவுக்கு மீறிநின்றது. மனித

னின் எதிர்பாராத வார்த்தைகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மரம் ஒவ்வொரு மனிதர்களுக்குமுள்ள வித்தியாசங்களை எண்ணி மனதிற்குள் நொந்துகொண்டது.

''ஆக்கவும், அழிக்கவும் முடியுமென்கிறாயே. அப்படியானால் என்னை அழித்துவிட்டு இதே இடத்தில் என்னைப் போலவே ஒன்றை ஆக்கமுடியுமா?'' சற்று உரத்த குரலில் கேட்டது மரம்.

''உன்னைப்போன்ற எத்தனை எத்தனையோ வகைகளை ஆக்கியும் உள்ளேன்; அழித்தும் உள்ளேன். நான் நினைத்தால் இதுகூடப் பெரிய காரியமல்ல! எதையும் சாதிக்கும் வல்லமையுடையவன். எவ்வளவு மதிப்புள்ளவன் மனிதன் என்பது உனக்கு எப்படித் தெரியும்? இந்தப் பரந்த உலகிலுள்ள செயற்கைகள் அத்தனையும் மனிதனாற் தான் அமைந்தவை என்பதை அறிவாயா? மனிதனின் கண்ணியத்தையும் கடமையையும் நீ கனவிற்கூடக் கண்டிருக்கமாட்டாய். பித்துப் பிடித்தவன்போல் ஏன் பிதற்றுகிறாய்'' என்றான் நையலாக.

''மனிதர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறாயே! அப்படியானால் எங்களைப் போன்றவர்களுக்கு இழைக்கும் அநீதி இதுதானா? பகுத்தறிவு படைத்த மனிதனின் பண்பு இதுதானா?'' சற்று அமைதியாகக் கேட்டது மரம்.

''அற்பமரமே உன் இறுமாப்பை என்னிடங் காட்டாதே. இந்தப் பெரிய காட்டிலுள்ள அற்ப உயிருடைய வனவிலங்குகளைக்கூடச் சிறு துரும்பாகத்தான் நினைக்கிறேன். உனது அறிவுரைக்கோ; அமைதிக்கோ அடிபணிய மாட்டேன்.'' உறுதியும் பயமின்மையும் அவனது பதிலில் கலந்திருந்தன.

உருக்குப்போன்ற அவனது கைகளிலிருந்த கோடரி மரத்தை மீண்டும் ஒருதரம் பதம் பார்த்துவிட்டு மறுபடி எத்தனிக்கும்போது வழியால் வந்த காட்டுயானை துதிக்கையால் அவனை வளைத்துப் பிடித்து பூமியில் அடித்தது. உயிர் பிரிந்த அவனது உடல் மட்டும் சற்றுத் தொலைவிற் போய்க்கிடந்தது.

சில மணித்தியாலங்களில் நடந்தவற்றைக் கண்ட மரமோ வாய்விட்டுச் சிரிக்கவில்லை; கைகொட்டி ஆரவாரம் செய்யவில்லை; அறிவீனத்தால் ஆணவம் கொண்ட மனிதனுக்கு நேர்ந்தவற்றைக்கண்டு அமைதியாக நின்றது!

# இலங்கையின் ஈரவலயத்தில் ஆனி-ஆடி மாதங்களில் ஒரு விவசாயி சமாளிக்கவேண்டிய
# புவியியற் பிரச்சினைகள்

[சி. கணபதிப்பிள்ளை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.]

இலங்கையின் ஈரலிப்புப் பிரதேசமானது ஆண்டு முழுவதும் பரவலான மழை வீழ்ச்சியைப் பெறுவதோடு 75'' ஆண்டு மழை வீழ்ச்சிக்கோடே இப் பிரதேசத்தின் எல்லையாக விளங்குகின்றது. இந்த ஈரவலயம் தென்மேற் பருவக்காற்றுக் காலமாகிய ஆனி-ஆடி மாதங்களிலே கணிசமான அளவு மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. சிறப்பாக ஈர வலயத்தில் காற்றின் ஈரப்பதனும் எப்பொழுதும் அதிகமாயிருக்கும்.

இவ்வீரவலயம் தென்மேற் பருவக் காற்றுக் காலமாகிய ஆனி—ஆடி மாதங்களில் அதிக மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொண்டாலும் இம் மழைவீழ்ச்சி சிலவேளைகளில் பருவம் தப்பி ஏற்படுவதனுல் அக் காலத்தில் ஏற்படும் நீரில்லாக் கஷ்ட நிலைமைகளைச் சமாளித்துக் கொள்ளவேண்டியுள்ளது. இவ் வீரவலயத் தாழ் நிலத்தில் நிலம் மென்சாய்வினை உடையதாகவும், நதிகள் எல்லாம் தட்டையான சமவெளிகளை உடையவையாகவும் காணப்படுகின்றன. இவ்வலயத்தில் பாயும் நதிகளாவன: தெதுறு ஓயா, மகாஓயா, களனிகங்கை, காலு கங்கை, பெந்தோட்டை கங்கை, ஜின் கங்கை, நில்வள கங்கை, வளவ கங்கை என்பனவாகும். அதிக நதிகள் இப் பிரதேசத்திற் பாய்வதால் மண்அரிப்பு அதிகமாக ஏற்படுவதோடு இவ் வலயத்திலுள்ள மலைப் பிரதேசங்களில் அதிக மழை ஏற்படுங் காலங்களில் நதிகள் பெருக்கெடுத்தோடிக் கடலில் சங்கமமாகின்றன.

இப் பிரதேசத்தில் விவசாயி நீர்த் தேக்கங்களை அமைத்துப் பருவம் தப்பி மழை ஏற்படுங் காலங்களில் நீர்ப் பாய்ச்சியும், மழை அதிகமாக ஏற்படுங் காலங்களில் வெள்ளப் பெருக்கினைச் சமாளித்துக்கொள்ளும் வகையில் நீர்த் தேக்கங்களிலிருந்து நீரை வெளியேற்றிக்கொள்ளும்பொருட்டு கால்வாய்கள் நல்லமுறையில் அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். நதிகள் இப் பிரதேசத்தில் வேகமாகப் பாய்வதினுலேயே இவ் வலயம் மண் அரிமானத்துக்குள்ளாகின்றது. தாழ்நிலப் பிரதேசத்தில் நதிகளின் வேகம் குறையவே அவை அரித்துக் கொண்டுவந்த வண்டல் மண் இடையிடையே தங்கவிடப்படுவதனுல் அச் சமவெளிப் பிரதேசத்திலேயே விவசாயியும் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இச் சமவெளிப் பிரதேசத்தில் மழைவீழ்ச்சி அதிகரிக்கவே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. வெள்ளப் பெருக்கின் காரணமாகப் பயிர்கள் எல்லாம் சேதமடை

கின்றன. இப் பள்ளத்தாக்குக்குக் கிட்டிய பிரதேசத்தில் விவசாயியும் வசிப்பதனுல் குடிபெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்று வசிக்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

இப் பிரதேசம் வருடம் முழுவதும் பரவலான மழைவீழ்ச்சியைப் பெறுவது காரணமாகக் குளங்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. அவையாவன: பொல்கொட ஏரி, லபுகம நீர்த்தேக்கம், மாதம்பை ஏரி, கொக்கல ஏரி என்பனவாகும். பருவம் தப்பி மழை ஏற்படுங் காலங்களில் இந் நீர்த்தேக்கங்கள் மூலம் நீர்ப்பாய்ச்சி விவசாயத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. முக்கியமாக தேவையான நேரங்களில் நீர் தேக்கி வைத்திருக்கக் கூடிய வசதியையும், மிதமிஞ்சிய மழைவீழ்ச்சி ஏற்படுங் காலங்களில் வெளியேற்றுவதற்குரிய வடிகால் முறையும் அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மிதமிஞ்சிய மழைவீழ்ச்சி குறிக்கப்பட்ட பருவத்தில் குறுகிய காலத்தில் ஏற்படுவதால் மண் அரிமானம் உண்டாவதைத் தொடர்ந்து சில இடங்களில் மண் சரிவும் ஏற்படுகின்றது. இம் மண் அரிமானத்தைத் தடுக்கும் பொருட்டுப் புல்லை வளர்க்கும் பிரச்சனையும் விவசாயத்தை எதிர்நோக்கியுள்ளது. ''லபுகம'' நீர்த்தேக்கம் வற்றவே களனி கங்கையிலிருந்து நீர் கொடுக்கப்படுகின்றது. இந்த உதாரணத்தின்மூலம் இவ் வலயத்தில் பருவம் தப்பி மழைவீழ்ச்சி ஏற்படுவது காரணமாக வரட்சி ஏற்படுகின்றது.

இவ் வலயத்தில் விவசாயி ஆனி-ஆடி மாதங்களில் பருவப்பெயர்ச்சி மழை காரணமாக ஏற்படும் மண் அரிமானத்தினுல் நிலத்திலுள்ள நைதரசன் சத்துக்களெல்லாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பிரச்சினையும் எதிர்நோக்கியுள்ளது. இப் பிரச்சினை காரணமாக மண் அரிமானம் ஏற்படக்கூடிய இடங்களில் பயன் தரக்கூடிய மரங்களான (உ + ம்) றப்பர் மரம் நாட்டுதல், இவற்ருேடு மத்தியகோட்டு மரங்களாகிய பாலை, தேக்கு. மலைவேம்பு போன்றவற்றை நாட்டுதல். இவ் வலயத்தில் ஆனி-ஆடி மாதங்களில் அதிக மழை வீழ்ச்சி கிடைத்தாலும் மலைப் பிரதேசங்களில் நீர் தேங்கி நிற்கமாட்டாதாகையால் புல் மிக விரைவாக வளருகின்றது. இக் காலத்தில் விவசாயி தான் பயிரிட்ட பயிரைவிட ஏனைய புல் முதலாகிய களைகளை அகற்றவேண்டிய பிரச்சினையும் இவனை எதிர்நோக்கியுள்ளது. ஆகவே புல் பிடுங்குவதற்குச் செலவு அதிகரிக்கும், அத்தோடு அதிக வேலையாட்களும் தேவைப்படுவார்கள். களை அகற்றுவதனுல் ஏற்படும் செலவை அதிகரிக்காமல் சமாளித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது!

★★

★★★

# 'B' உயிர்ச்சத்தும் அதன் கண்டுபிடிப்பும்

—[ எம். ஐ. எஸ். தாவூத், 38மெயின் வீதி, மட்டக்களப்பு. ]—

இற்றைக்கு 1600 ஆண்டுகட்குமுன், நெடும் பிரயாணஞ் செய்யும் கப்பல் தொழிலாளிகள் உப்பிட்ட இறைச்சி வகைகளையும், ரொட்டிகளையும் உண்டுவந்தனர். அவர்கட்கு தசைவலியும், உடற் பலவீனமும், மூக்கிலிருந்து குருதி வெளிப்படுதல் போன்ற வியாதிகளும் ஏற்பட்டன. இறுதியில் அவர்களில் அதிகமானோர் 'ஸ்கேவி' என்னும் வியாதியினால் மாண்டனர்.

1600-ம் ஆண்டில் ஒரு ஆங்கிலேய டாக்டர் கப்பற் தொழிலாளிகட்கு எலுமிச்சம் சாறு கொடுத்தார். அப்போது இந்த 'ஸ்கேவி' என்னும் வியாதி தோன்றவில்லை.

ஜப்பான் தேசத்துக் கப்பற் தொழிலாளர்கள் தீட்டப்பட்ட அரிசியையே உணவாகக் கொண்டனர். நெடும் பிரயாணத்தின்போது அவர்கள் பலவீனமடைந்து, விறைப்பு ஏற்பட்டு பாரிசவாதத்தினால் வருந்தி ,'பெரிபெரி'' எனும் நோயினால் மாண்டனர்.

ஜப்பானிய அரசாங்கம் அவர்களின் உணவுடன் மரக்கறி வகைகளையும், பழ வகைகளையும் சேர்த்த பின் இவ் வியாதி மீண்டும் தோன்றவில்லை. தீட்டப்பட்ட அரிசி உண்பதால் பெரிபெரி எனும் இந்நோய் உண்டாகின்றது. கிழக்கிந்தியாவில் வசித்த டாக்டர் ஐக்மென் என்பவரிடம் பெரிபெரியால் வாடும் பல நோயாளிகள் இருந்தனர். ஐக்மென் கோழிக்குஞ்சுகளும் தீட்டப்பட்ட அரிசி உண்பதை அறிந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே அக் கோழிக் குஞ்சுகளுக்கும் பெரிபெரி நோய் வந்துவிட்டது. அக்குஞ்சுகளை அவர் ஏ எனவும் பி எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்தார். ஏ எனும் பிரிவுக்குத் தீட்டப்பட்ட அரிசியையே கொடுத்தார். பி எனும் பிரிவுக்குத் தீட்டப்பட்ட அரிசியையும், அவ் வரிசியில் இருந்தெடுத்த தவிட்டையும் கொடுத்தார். இத் தவிடு அவ'சியமாக இருந்தால் வியாதி தீரவேண்டும். சிலமணி நேரத்தின் பின் அவர் எதிர்பார்த்தது போலவே ஏ பிரிவுக் குஞ்சுகள் இறந்தன. கோழித் தீனியாகிய இத் தவிட்டில் ஏதோ ஒரு பொருள் இருக்கிறது.

டாக்டர் ஐக்மென் மீண்டும் பரிசோதித்து ஒரு முடிவுக்கு வந்தார். பெரிபெரியால் வாடிய நோயாளிகட்கு இவர் தவிடு கொடுக்குமாறு உத்தரவிட்டார். அவர்களும் இதனல் அந் நோயிலிருந்து நீங்கினர். மனித உணவிற்கு அரிசித் தவிடு முக்கியமாகும். இத் தவிட்டில், இந் நோய் வராது தடுக்கும் பொருள் யாது?

டாக்டர் ஐக்மென்னுடைய கண்டுபிடிப்பைப் படித்த விஞ்ஞானிகள் தவிட்டை இரசாயன முறைப்படி ஆராய்ந்தனர். இதன்பயனுக போலந்து தேசத்து உயிரியல் வல்லுனரான ''கஷ்மீர் பங்க்'' என்பவர் உயிர்ச்சத்து என்னும் பொருளைப் பிரித்தெடுத்தார். இப் பொருள் பெரிபெரி என்னும் வியாதியைக் குணப்படுத்தியது. இதற்கு உயிர் சத்து பி (B) எனப் பெயரிட்டார். இவ் வுயிர்ச்சத்து மதுவம், போஞ்சி, பயத்தைபோன்ற தானியங்களிலும் பால், ஈரல், முட்டைகளிலும் உண்டு. இது நீரில் கரையுமாதலால் இது அதிகமாகக் கழிவுப் பொருட்களுடன் வெளியேறுகிறது.

-★-


## இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை!

தமிழ்க் குழந்தைகளின் உள்ளத்தைத்
துள்ளச் செய்யும்

## — '' அணில் '' —

[சிறுவர் - சிறுமியர் மாத இதழ்]

★ **சின்னச் சின்னக் கதைகள்!**

★ **சிங்காரப் பாட்டுகள்!**

★ **வேடிக்கை விநோதங்கள்!**

★ **பலவகையான பரிசுப்போட்டிகள்!**

ஒவ்வொரு மாதமும் 25,000 குழந்தைகள்
போட்டி போட்டுக்கொண்டு படிக்கிறார்கள்.

தொடர்பு கொள்க: '' **அணில்** ''

ஸ்ரீ ராம பவனம் பில்டிங்,
50, காந்தி வீதி, புதுச்சேரி - 1.

# — கட்டுரைப் போட்டி —

## மொத்தப் பரிசு ரூபா 30-00

⁕ மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்கு மாத்திரம் ⁕

**கவனிக்க:-** பாடசாலையிற் கற்கும் மாணவர்கள் ஆண்-பெண் இருபாலாரும் வயதுக் கட்டுப்பாடின்றியும், பாடசாலையிற் படிக்காத - 22 வயதுக்குட்பட்ட - ஆண்-பெண் இருபாலாரும் மாணவர் மன்றத்தில் அங்கத்தவராகச் சேரலாம். இதுவரை அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களும், **15-12-69**க்கு முன் அங்கத்தவர்களாகச் சேர்கின்றவர்களும் கட்டுரைப் போட்டியிலும் மற்றும் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசு பெறலாம்.

1. பாடசாலை மாணவர் — 16 வயதுக்குட்பட்டவர்
**'தைப் பொங்கல்'** (250 சொற்களுள்)

2. பாடசாலை மாணவர் — 16 வயதுக்கு மேற்பட்டவர்
**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'** (350 சொற்களுள்)

3. பாடசாலையிற் படிக்காதவர் — 22 வயதுக்குட்பட்டவர்
**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'** (350 சொற்களுள்)

என்ற தலைப்பில் குறிப்பிட்ட சொற்களுக்கு அதிகப்படாது கட்டுரை எழுதி 15-12-69க்கு முன் அனுப்பவேண்டும்.

மூன்று பிரிவிலும் சிறந்த கட்டுரையாகத் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு கட்டுரைக்கும் தனித்தனி 10-00 ரூபா பரிசாக வழங்கப்படும்.

ஒருமுறை மாணவர் மன்றத்தில் அங்கத்தவராகச் சேர்ந்தவர் வெற்றிமணி நடாத்தும் எந்தப் போட்டியிலும் பங்குபற்ற முடியும்.

> வெற்றிமணியில் உள்ள கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் உங்கள் கட்டுரையுடன் இணைத்து அனுப்புக.

**"வெற்றிமணி"** — முள்ளியவளை. — இலங்கை.

---

**கட்டுரைப் போட்டி** முடிவு திகதி **15-12-69**

பெயர் ..............................

முகவரி ..............................

பிறந்த திகதி ..............................

மாணவர் மன்ற அங்கத்துவ இல. ..............................

இக் கட்டுரை எனது சொந்த முயற்சியால் எழுதப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
கையொப்பம்

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். தமிழகத்திலுள்ளவர்கள் வெற்றிமணியிலுள்ள தமிழகப் பிரதிநிதியின் முகவரிக்கு அனுப்புக.

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ..............................

பாடசாலை முகவரி ..............................

வீட்டு முகவரி ..............................

பிறந்த திகதி .............. வயது .............. வகுப்பு ..............

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

.............................. ..............................

ஆசிரியர் / பெற்றூர் கையொப்பம் கையொப்பம்

# பேனு நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனால் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, முள்ளியவளை, இலங்கை.**

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப்பதிவுசெய்யப்பட்டது Q.B.1338


## QUALIFIED OPTICIANS

*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,

**COLOMBO. 11.**

*Telegrams:* **VASOPTICO** *Telephone:* **2931**

---

கண்களுக்குத் தேவையான

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

# மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

கொழும்பு. 11.

தொலைபேசி: 2931


இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-10-69 புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.